

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் மேல்முதலம்பேடு ஊராட்சியில் குருத்தானமேடு கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி நிதிலிருந்து ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பேருந்து நிழற்குடை கட்டடத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் உடன் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜே. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, துரை சந்திரசேகர் , ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை. ஜெயக்குமார், பொன்னேரி சார் ஆட்சியர் வாஹே சங்கத் பல்வந்த். ஒன்றிய கழக செயலாளர் கி.வே.ஆனந்த் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் பி.ஜெ. மூர்த்தி, மாவட்ட ஊராட்சி செயலர் மோகன், கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை தீவுத்திடலில்

# 49-வது இந்திய சுற்றுலா - தொழில் பொருட்காட்சி!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு அரங்குகளை நேரில் பார்வையிட்டார்!

சென்னை,ஜன.4-

சென்னை தீவுத்திடலில் நடைபெறவுள்ள 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025-ல் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்ட சாதனைகள் தொடர்பாக விளக்கக்கூடிய பல்வேறு புகைப்படங்கள் அரங்கத்தில் இடம் பெற உள்ளது என கண்காட்சி அரங்குகளை ஆய்வு செய்தபின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (03.01.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெறவுள்ள 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி- 2025-ல் இடம் பெறவுள்ள இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சிஎம்டிஏ கண்காட்சி அரங்குகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி. கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

ஆண்டுதோறும் நடைபெற்று வரக்கூடிய பொருட்காட்சியை பொறுத்தவரையில் பொங்கல் விழாவை வடசென்னை மக்கள் மகிழ்ச்சியாக கொண்டாடப்படுகிறது. குறிப்பாக 49 ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியனது நடைபெறவுள்ள நிலையில் தமிழகத்தில் உள்ள துறைகளை சார்ந்த 46 அரங்குகள் அமைக்கப்பட உள்ளது.

குறிப்பாக இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பாக அமைக்கப்படுகின்ற அரங்குகளை பார்வையிட வந்தோம். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் புதிதாக துவங்கப்பட்ட கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் உட்பட 6 பேருந்து நிலையங்களின் மாதிரியை (Miniatures) பொருட்காட்சியில் காட்சியமைக்கப்பட உள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 8,400 சதுர அடியில் உலக அளவில் பேசப்பட்ட அனைத்துலக முருகன் பக்தர் மாநாட்டை போல ஒரு வடிவமைப்பை இந்த பொருட்காட்சியில் இந்த ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அரங்கை அமைத்துள்ளோம். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு தெய்வங்களின் வழிபாட்டு முறைகளையும் அந்த தெய்வங்களின் வரலாற்றையும் இடம்பெறச் செய்துள்ளோம்.

இந்த ஆட்சி பொறுப்பேற்று நிகழ்த்திய சாதனைகளில் 40 சாதனைகளை படங்கள் வாயிலாக விளக்க உள்ளோம். சுமார் 11 திருக்கோவில்களில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபாயில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டம் தொடர்பான விளக்க புகைப்படம் அமைக்கப்பட உள்ளது. அதை போல் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற திட்டத்தினை விளக்கக்கூடிய வகையில் புகைப்படங்களும் கண்காட்சியில் வைக்கப்பட உள்ளது.

அதேபோல் 400 வருடங்களுக்குப் பிறகு குடமுழக்கு திருவிழா நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்ட கோவில் தொடர்பான விளக்கப் புகைப்படமும் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுலா பொருட்காட்சி நடைபெறக்கூடிய ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டில் உள்ள ஏதாவது ஒரு கோவிலின் பிரசாதம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய உள்ளோம்.

கடந்தாண்டு இந்து சமய அறநிலையத்துறையின் அரங்கமானது இரண்டாம் பரிசு பெற்றது. இந்த ஆண்டு முதல் பரிசு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறோம். நாங்கள் வழிபடுகின்ற பொழுது அனைவரும் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் வழிபடுகிறோம். ஏனெனில் எங்களது வழிபாடு ஒரே குறிக்கோளை கொண்டு தான் இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் திராவிட மாடல் அரசின் தமிழக முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் கழக பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 92 வது வட்டத்திற்கு உட்பட்ட அம்பேத்கர் விளையாட்டு திடல் மற்றும் 20/ஏ பஸ் நிறுத்தம் இடத்தில் உயர் கோபுர மின் விளக்குகள் திறப்பு விழாவிற்கு வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே ராஜன் முன்னிலையில் பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில் சுரேஷ் மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன் மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழில்அரசு ஆகியோர் வரவேற்புரையில் உயர் கோபுர மின் விளக்குகளை மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினரும் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவங்கி வைத்தார்.

# சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தொகுதியில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்ப்பு!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தொகுதியில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்ப்பு கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

| நாள் | பகுதி | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 04-01-2025 சனிக்கிழமை | பெரம்பூர் வடக்கு | மாலை 4.30 மணி 34-வது வட்டம் |
| | | மாலை 5.00 மணி 35-வது வட்டம் |
| 05-01-2025 ஞாயிற்றுக்கிழமை | பெரம்பூர் தெற்கு | காலை 9.00 மணி 36-வது வட்டம் |
| | | காலை 9.30 மணி 44-வது வட்டம் |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,பகுதி செயலாளர்கள், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு - பொதுக்குழுஉறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,மாவட்ட - பகுதி நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர்கள்மற்றும் கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.





சென்னை வடக்கு மாவட்டக் கழக கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொது குழு உறுப்பினர்கள் வட்ட செயலாளர்கள் பகுதி நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் நேற்று (03.01.2025) ஆணையர் அலுவலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில் மூலவர் விமானத்திற்கு செப்பு தகடு வேய்ந்து தங்க ரேக்குகளை பொருத்தும் பணிகளுக்கு உபயதாரர்கள் ஆர்.ஹரி மற்றும் ஆர்.குகன் ஆகியோர் 8 கிலோ 405 கிராம் தங்கக் கட்டிகளை வழங்கினர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், ந.திருமகள், சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் இரா.வான்மதி, வி.குமரேசன், அலுவலர்கள் மற்றும் பட்டாச்சாரியார்கள் உள்ளனர்.

### நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஏற்பாட்டில்

# துப்புரவுப் பணியாளர்களுக்கு அறுசுவை உணவு - நல உதவிகள்!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினர்!

திருவள்ளூர், ஜன. 4:

திமுக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் நகராட்சி சார்பில் துப்புரவு பணியாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நகர மன்ற தலைவரும் மேற்கு மாவட்ட துணை செயலாளர் பா.உதயமலர் பாண்டியன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம் எல் ஏ, தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு துப்புரவு பணியாளர்களாக பணியாற்றும் 190 பேருக்கு வேட்டி, சேலை, லுங்கி மற்றும் எவர் சில்வர் தட்டு, பை ஆகியவற்றை வழங்கினர். அதனைத் தொடர்ந்து துப்புரவு பணியாளர்கள், நகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிலை ஊழியர்கள் என 750 பேருக்கு பிரியாணி வழங்கி தாங்களும் துப்புரவு பணியாளர்களோடு அமர்ந்து அறுசுவை உணவு சாப்பிட்டனர்.

முன்னதாக பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

இதில் மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திருநாவுக்கரசு மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாஸ்டர் குருதாஸ், ப.சிட்டிபாபு, ஒன்றிய கழக செயலாளர் மோ.ரமேஷ், கூளூர் எம். ராஜேந்திரன், முன்னாள் நகர மன்ற தலைவர் பொன். பாண்டியன், நகரக் கழக நிர்வாகிகள் ராஜேஸ்வரி கைலாசம், என்.பரசுராமன், சம்பத் ராஜா, இ.குப்பன், டி.என். ஆர்.சீனிவாசன், டி.சிவகுமார், வார்டு உறுப்பினர்கள் வசந்தி வேலாயுதம், பி. நீலாவதி பன்னீர்செல்வம், கு. பிரபாகரன், ஆர்.பிரபு, ஜி.சாந்தி கோபி, த. அய்யூப் அலி, டி. கே.பாபு, வி.இ.ஜான், ஜி.ஆர்.ராஜ்குமார்தாமஸ், எஸ். பத்மாவதி ஸ்ரீதர், பி. அருணா ஜெய் கிருஷ்ணன், டி.செல்வகுமரன், இந்திரா பரசுராமன், வி.சீனிவாசன், ஹேமலதா நரேஷ், ஆர் விஜயகுமார், எஸ்.கமலி மணிகண்டன், எஸ்.தனலட்சுமி சீனிவாசன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132 வது வட்டத்தில் "ஏன் வேண்டும் தி.மு.க. என்ற தலைப்பில் விளக்க உரையும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு சிறப்புரையாற்றி நலதிட்ட உதவிகள் வழங்கினார். பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை, மாநில மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் கோடம்பாக்கம் சத்யா, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, வட்ட கழக செயலாளர் ந.மோ.முரளி மற்றும் மாவட்டக் கழக, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள், பாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கூட்டம் !

## மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் வெல்வோம் 200 + படைப்போம் வரலாறு என்று கூறியுள்ளதையடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 3 சட்டமன்ற தொகுதியையும் வென்றிடும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் பணியை தொடங்கிட முதற்கட்டமாக பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கூட்டம் கீழ்கண்ட அட்டவனைபடி தலைமைக் கழகத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்களான மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் என்.இளையராஜா, பூம்புகார் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன், சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எம்.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் உள்ள ஒன்றிய,நகர,பேரூர் பகுதியில் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கூட்டத்தை ஒன்றிய,நகர,பேரூர் செயலாளர்கள் சிறப்பாக நடத்திட வேண்டும்.இந்த பூத் கமிட்டி உறுப்பினர் கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

| தேதி | நேரம் | ஒன்றியம் / பேரூர் | இடம் | பூத் |
|---|---|---|---|---|
| **மயிலாடுதுறை தொகுதி** | | | | |
| 04.01.2025 | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை மேற்கு | நாராயணி மஹால், மாப்படுகை. | 22 |
| 04.01.2025 | மாலை 5.00 மணி | குத்தாலம் பேரூர் | A.M.K. அருள் திருமண மண்டபம், குத்தாலம். | 14 |
| 04.01.2025 | மாலை 5.00 மணி | குத்தாலம் வடக்கு | A.M.K. அருள் திருமண மண்டபம், குத்தாலம். | 17 |
| 06.01.2025 | மாலை 5.00 மணி | மயிலாடுதுறை கிழக்கு | அருள் திருமண மண்டபம், நல்லத்துக்குடி | 25 |
| 06.01.2025 | காலை 9.00 மணி | மயிலாடுதுறை மத்தியம் | R.G.R. திருமண மண்டபம், சின்னநாகங்குடி | 59 |
| 06.01.2025 | காலை 11.00 மணி | மயிலாடுதுறை மத்தியம் | A.K.R. திருமண மண்டபம், காளி. | |
| **சீர்காழி தொகுதி** | | | | |
| 04.01.2025 | காலை 10.00 மணி | சீர்காழி கிழக்கு | அங்கால பரமேஸ்வரி திருமண மண்டபம், திருவெண்காடு | 58 |
| 05.01.2025 | காலை 10.00 மணி | சீர்காழி மேற்கு | சீர்காழி ஒன்றிய அலுவலகம் | 27 |
| 05.01.2025 | காலை 11.00 மணி | சீர்காழி மேற்கு | காவியா திருமண மண்டபம், வை.கோவில். | 21 |
| 05.01.2025 | காலை 10.00 மணி | கொள்ளிடம் கிழக்கு | மலர்மங்கை திருமண மண்டபம், புதுப்பட்டினம் | 21 |
| 05.01.2025 | மாலை 3.00 மணி | கொள்ளிடம் கிழக்கு | R.M.A. திருமண மண்டபம், கடவாசல். | 34 |
| 06.01.2025 | மாலை 4.00 மணி | சீர்காழி நகரம் | M.S. திருமண மண்டபம், சீர்காழி | 32 |
| 06.01.2025 | மாலை 6.00 மணி | வை.கோவில்.பேரூர் | காவியா திருமண மண்டபம், வை.கோவில். | 08 |
| **பூம்புகார் தொகுதி** | | | | |
| 04.01.2025 | காலை 11.00 மணி | சீர்காழி கிழக்கு | துர்கா திருமண மண்டபம், பூம்புகார் | 21 |
| 05.01.2025 | காலை 9.00 மணி | குத்தாலம் கிழக்கு | P.M.S. திருமண மண்டபம், மங்கைநல்லூர். | 40 |
| 05.01.2025 | காலை 4.00 மணி | குத்தாலம் மேற்கு | பூபதி மஹால், ஸ்ரீகண்டபுரம். | 36 |

குறிப்பு:- பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் குறித்து அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) பூத் கமிட்டி கூட்டத்தில் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ள செய்திட வேண்டும்.

**நிவேதா. எம்.முருகன்** எம்.எல்.ஏ.,
செயலாளர்.
மயிலாடுதுறை மாவட்டம், தி.மு.க.